**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ஆம் நாள்,**
**CC 60/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.04.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. காத்தவராயன் | வயது | : | 75 |
| த.பெ | : | திரு. வெங்கடேசன் | நிலை | : | **PW-3 (LW-3)** |

**Accused called absent. Defence counsel filed petition u/s.317 – Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரனை -** நான் தற்போது புதுச்சத்திரம் மெயின்ரோட்டில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். சுமார் 10 வருடங்களுக்குமுன்பு புதுச்சத்திரம் மெயின்ரோட்டில் உள்ள எனது வீட்டிலிருந்தபோது திடிரென்று அதிகாலை 2 மணிக்கு சத்தம் கேட்டது. நான் வெளியே வந்துபார்த்தபோது ரோட்டின் இழுப்பைமரம் அருகே ஒரு பெண்மணி இறந்துகிடந்தார். கார் ஒன்று வேகமாக வந்தபோது லாரி ஒன்று வந்து விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்தில் மேற்படி காரும், லாரியும் நின்றிருந்தது. மேற்படி அடிப்பட்ட பெண்மணியை அபாய வண்டியில் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி வாகனங்களின் பதிவு எண்கள் தற்போது ஞாபகமில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** நான் சத்தம்கேட்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது சாலையின் மேற்குபுறத்தில் சாலையின் ஓரமாக மண் ரோட்டில் இறந்தவர் சடலம் இருந்து என்றாலும் அந்த சடலத்திற்குமேல் கார் இருந்தது என்றாலும் சரிதான்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு ஏப்ரல்  மாதம் 08-ஆம் நாள்,**
**CC 60/2016**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.04.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தட்சிணாமூர்த்தி | வயது | : | 55 |
| த.பெ | : | திரு. பாவாடை | நிலை | : | **PW-4 (LW-4)** |

**Accused  called absent. Defence counsel filed petition u/s.317 – Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரனை -** நான் தற்போது புதுச்சத்திரம் மெயின்ரோட்டில் வசிக்கிறேன். ரைஸ்மில் வைத்து நடத்திவருகிறேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை சுமார் 10 வருடங்களுக்குமுன்பு புதுச்சத்திரம் மெயின்ரோட்டில் உள்ள ஐயப்பன் வீட்டின் அருகே நான் மதியம் நின்றுகொண்டிருந்தபோது  புதுச்சத்திரம் போலிசார் வந்து விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு தயார் செய்த வரைபடத்திற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன், இன்னொரு சாட்சி கையொப்பம் யார்போட்டது என்று தெரியாது. மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ.2**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை -** அ.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள என்னுடைய கையொப்பத்தை புதுச்சத்திரம் காவல் நிலையத்தில்வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**